## முத்தமிழறிஞர் கலைஞர் கல்விக்காகத் தீட்டிய பல்வேறு திட்டங்களால்

# தமிழ்நாடு கல்வியில் தலைசிறந்த மாநிலமாக விளங்குகிறது!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, ஜூன் 16-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கல்விக்காகத் தீட்டிய பல்வேறு திட்டங்களால் தமிழ்நாடு கல்வியில் தலைசிறந்த மாநிலமாக விளங்குகிறது என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 13.06.2023 அன்று அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நடைபெற்ற நான் முதல்வன் - போட்டித் தேர்வுகள் பிரிவில் ஒன்றிய அரசின் தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி துவக்க விழா நிகழ்ச்சியில் ஆற்றிய உரை வருமாறு:

நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் மூலம் சென்னையில் உள்ள மாணவர்களுக்கு Staff Selection Commission, Indian Railway Service, Institute of Banking, Personnel Service போன்ற ஒன்றிய தேர்வுகளுக்கான பிரத்யேக பயிற்சி மையத்தை தொடங்கி வைப்பதில் நான் இன்று மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்நாடு கல்வியில் தலை சிறந்த மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. பள்ளிக்கல்வி, உயர் கல்வியிலும் நம்முடைய மாநிலத்தின் நிலை என்பது தேசிய சராசரியை விட அதிகமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

**'நான் முதல்வன்' என்ற மகத்தான திட்டம்!**

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட பல்வேறு திட்டங்களாலும் சீரிய முயற்சிகளாலும் கல்வியில் தமிழ்நாடு சிறந்து விளங்க ஒரு முக்கியக் காரணமாக இன்று அமைந்துள்ளது. இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய வீடுகளில் உள்ள பல்வேறு முதல் தலைமுறை மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள் என அனைவருமே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கல்விக்காக தீட்டிய பல்வேறு திட்டங்களால் தான் இந்த நிலையை அடைந்துள்ளார்கள்.

இன்றைக்கு மாறிவரும் உலகிற்கு ஏற்ப இந்திய ஒன்றியம் மட்டுமன்றி பட்டதாரிகளுக்கு எப்படி வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று யோசித்து உருவாக்கிய திட்டம்தான் இந்த "நான் முதல்வன்" என்ற நல்ல மகத்தான ஒரு திட்டம்.

சில நாட்களுக்கு முன்பு நான் இந்த "நான் முதல்வன்" திட்டத்தின் திறன் பயிற்சி பெற்று அதன் மூலம் வேலை வாய்ப்பு முகாம்களில் பங்கேற்று அதில் வெற்றி பெற்ற நம்முடைய மாணவ, மாணவியர்கள் கிட்டத்தட்ட 1425 பேருக்கு ஆண்டுக்கு ஒன்பது இலட்சம் ரூபாய் வரை ஊதியம் பெறுகின்ற அளவுக்கான பணி நியமன ஆணைகளை சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு நானே என்னுடைய கைகளால் வழங்கினேன்.

"நான் முதல்வன்" திட்டம் செயல்படும் சாதனையில் ஒரு பகுதியாக இன்றைக்கு இங்கு "நான் முதல்வன்" போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையத்தை இந்த அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் இன்று தொடங்கி வைக்கிறேன்.

என்னதான் நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் தனியார் நிறுவனங்களுக்கு வேலைக்கு சென்றாலும், அரசு அலுவலகங்கள் குறிப்பாக ஒன்றிய அரசினுடைய அலுவலகங்கள் எண்ணிக்கை என்பது ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வருகின்றது.

**தமிழ்நாட்டு மாணவர்கள் அதிக அளவில் பங்கேற்று வெற்றி பெற வேண்டும்!**

ஒரு காலத்தில் UPSC முடிவு வந்தால் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை நம்முடைய தமிழ்நாட்டு தேர்வர்கள் வென்றார்கள். இன்றைக்கு அந்த நிலை இல்லை. மாறிக்கொண்டு வந்து கொண்டிருக்கிறது. எனவேதான், எந்த ஒன்றிய அரசு அலுவலகங்களுக்குச் சென்றாலும் நம்முடைய மாநிலத்தவர்கள் அதிகாரிகளாக இருப்பது சிறிது காலமாக, ஆண்டுக்காண்டு அது குறைந்து கொண்டே வருகின்றது. பல குக்கிராமங்களில் உள்ள பொதுத்துறை வங்கிகளில் இந்தி உள்ளிட்ட வேறு மொழி பேசுபவர்களே அதிக எண்ணிக்கையில் மேலாளர்களாக இருக்கின்றார்கள். அதனால்தான் இங்கிருக்கக்கூடிய நம்முடைய பாமர மக்கள் வயதான குடிமக்கள், வங்கி சேவைகள் பெறுவதில் கொஞ்சம் சிரமப்படுகிறார்கள்.

மொழி ஒரு தடையாக இருப்பதால் அரசு சேவை, சென்றடைவதில் ஒரு தொய்வு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே ஒன்றிய அரசுத் தேர்வுகள் தமிழ் நாட்டு மாணவர்கள், அதிக அளவில் பங்கேற்று வெற்றி பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடுதான் இந்த போட்டித் தேர்வுகளை நான் கடந்த மார்ச் மாதம் 7ஆம் தேதி தொடங்கி வைத்தேன்.

Staff Selection Commission, Indian Railway Service, Indian Institute of Banking, Personnel Service போன்ற தேர்வுகளுக்குக் கட்டணம் இல்லாமல் 100 நாட்களுக்கு பயிற்சி பெறும் இந்த திட்டத்திற்கு மாணவர்கள் மத்தியிலும், போட்டித்தேர்வு ஆர்வலர்களிடமும் மிகப் பெரிய அளவில் வரவேற்பதை நாம் காணமுடிகிறது. இந்தப் பிரிவு தொடங்கி வைக்கப்பட்ட மூன்றே மாதங்களில் இன்றைக்கு 29,024 விண்ணப்பங்கள் வந்துள்ளன. பத்தாம் வகுப்பு மதிப்பெண், பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண், பட்டப்படிப்பில் பெற்றுள்ள சதவீதம் மற்றும் இடஒதுக்கீட்டு முறையில் 6,900 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**கூடுதல் பயிற்சி மையங்கள்!**

சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மட்டும் ஆயிரத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் வந்துள்ளன. அதனால் கூடுதல் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு இன்று முதல் செயல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, சென்னையில் மட்டுமே 3,042 பேர் விண்ணப்பித்துள்ளனர். அதிலிருந்து 450 பேரை தேர்வு செய்து, சென்னை மாவட்டத்தில் மட்டும் இன்று 3 பயிற்சி மையங்கள் துவங்கப்பட உள்ளன. அதில் ஒரு தேர்வு மையம் தான் இன்று நாம் அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் தொடங்கி வைத்துள்ளோம்.

இதன் மூலமாக UPSC, Staff Selection Commission, Indian Railways ஆகிய தேர்வுகளுக்கு அதிக அளவிலான தேர்வாளர்களை நிச்சயம் தயார்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இது வரை Staff Selection Commission, வங்கித் தேர்வு, ரயில்வே தேர்வு போன்றவற்றுக்கு தயாராக வேண்டும் என்றால், நம்முடைய மாணவர்கள் டெல்லி போன்ற இடங்களில்தான் தனியார் பயிற்சி மூலம் தான் அதற்கான பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். அங்குள்ள பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து படிக்க வேண்டும் என்றால், மிகப் பெரிய அளவில் செலவு செய்ய வேண்டியிருக்கும். ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் அங்கெல்லாம் சென்று படிக்க இயலாத சூழல் இருந்தது.

இவற்றையெல்லாம் சரி செய்யும் நோக்கில்தான் இன்று இந்த "நான் முதல்வன்" போட்டித் தேர்வு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் வெல்லும் நீங்கள், அடுத்தடுத்த தலைமுறைக்கும் எப்படி இது போன்ற தேர்வுகளுக்கு தயாராவது என்பது குறித்து ஆலோசனைகளை நீங்களும் வழங்க வேண்டியது அவசியம். உங்களுடைய ஒன்றிய அரசுப்பணி கனவு வெல்லட்டும், இங்கு பயிற்சி பெறவுள்ள உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

---

### வேதாரண்யம் வட்டம் - வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான

# 2122.10 ஏக்கர் நிலங்களுக்கு திருக்கோயில் பெயரில் பட்டா!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூன் 16-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகளும், நிலவுடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட நடவடிக்கையின் போது தவறுதலாக பட்டா மாற்றம் செய்யப்பட்ட இனங்கள் மற்றும் வருவாய்த்துறையில் கணினி சிட்டா தயாரிக்கும் போது தவறுதலான பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட இனங்கள் குறித்து சம்பந்தப் பட்ட திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் மாவட்ட வருவாய் நிர்வாகத்திடம் மேல்முறையீடு செய்து அவற்றை மீட்கும் பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம், வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான அகஸ்தியம் பள்ளி கிராமத்தைச் சேர்ந்த 2122.10 ஏக்கர் நிலங்களுக்கு திருக்கோயில் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்ற 07.05.2021 முதல் 31.05.2023 வரை திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.4,505 கோடி மதிப்பீட்டிலான 4,802 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. நிலவுடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத் தவறினால் பட்டா மாற்றம் செய்யப்பட்ட இனங்களில் 1771.17 ஏக்கர் நிலங்களும், கணினி சிட்டா தயாரிப்பில் தவறான இனங்களில் 2541.26 ஏக்கர் நிலங்களும் மேல் முறையீட்டின் மூலம் மீட்கப்பட்டுள்ளன. மேலும் திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்யும் பணிகளில் இதுவரை 1,16,886 ஏக்கர் நிலங்கள் அளவிடப்பட்டு, எல்லை கற்கள் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் ஆகியோரால் பாடல் பெற்ற தலமாகவும், சப்த விடங்கத் தலங்களில் ஒன்றாகவும் விளங்குகின்ற வேதாரண்யம், வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான அகஸ்தியம் பள்ளி கிராமத்தி லுள்ள நிலங்கள் வேதாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான சர்வ மான்ய நிலங்கள் எனவும், அந்நிலங்கள் உப்பு நிறு வனத்தின் (Salt Corporation) அனுபவத்தில் உள்ளதாகவும், அந்நிலங்களுக்கு உப்பு நிறுவனம் குத்தகை தொ கையினை திருக்கோயிலுக்கு வழங்கி வருவதாகவும், அந்நிலங்களை சர்வே செய்து திருக்கோயில் பெயரில் பட்டா வழங்கிட சென்னை உதவி நிலவரித்திட்ட (வடக்கு) அலுவலர் நீதிமன்றத்தில் அத்திருக்கோயில் செயல் அலுவலர்களால் 2006ம் ஆண்டு முதல் தொடர்ந்து முறையீடு செய்யப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்வில் சிறப்பு கவனம் செலுத்தி துரித நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரைகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து இவ்வழக்கில் துறையின் மூலம் பணிகள் விரைவு படுத்தப்பட்டன.

அதனடிப்படையில் திருக்கோயில் நிர்வாகத்தால் தொடரப்பட்ட வழக்கில் வேதாரண்யம் வட்டம், அகஸ்தியம்பள்ளி கிராமத்தில் புல எண்.284க்கு கட்டுப்பட்ட 2122.10 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலங்களுக்கு தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 பிரிவு 8(2) (ii)ன்படி வேதாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானம் பட்டா பெற முழு தகுதியுடையவராகிறார் என சென்னை உதவி நிலவரித்திட்ட (வடக்கு) அலுவலரால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் நீண்ட கால சட்டப் போராட்டங்களுக்கு பின்னர் இத்தீர்ப்பு திருக்கோயிலுக்குச் சாதகமாக கிடைக்கப்பெற்றுள்ளது. இத்தீர்ப்பின் அடிப்படையில் இந்நிலங்களுக்கு பட்டா பெற நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியருக்கு திருக்கோயில் செயல் அலுவலரால் விண்ணப்பிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு திருக்கோ யிலுக்கு சொந்தமான 2122.10 ஏக்கர் நிலங்களுக்கு திருக்கோ யில் பெயரிலேயே பட்டா பெறப்பட்டுள்ளது. மேலும், வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இதர நிலங்களுக்கும் திருக்கோயில் பெயரிலேயே பட்டா பெறு வதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒட்டுமொத்தமாக, திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எங்கிருந்தாலும் அவற்றை கண்டறிந்து அத்திரு க்கோயிலுக்கு ஒப்படைக்கும் பணிகளில் இந்த அரசும், இந்து சமய அறநிலையத்துறையும் உறுதுணையாய் செயலாற்றும் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை, அயனாவரத்தில் சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு பொதுக் கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்திற்கு முன்னிலையேற்ற அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், சி.பி.எம். கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் கே.பாலபாரதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆளூர் ஷாநவாஸ், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு தலைவர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு, கழக மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட

# ஜெயகோபால் கரோடியா பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம்!

## கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜூன் 16-

சென்னை திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட கோடை விடுமுறை முடிந்து தமிழகம் முழுவதும் பள்ளிகள் திறக்கப்பட்ட நிலையில் திருவொற்றியூர் ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளிக்கு வருகை தந்த மாணவ - மாணவியர்களுக்கு திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாநில மீனவர் அணி துணை தலைவருமான கே.பி.சங்கர் வரவேற்று இனிப்பு மற்றும் ஐஸ்கிரீம் வழங்கினார். மேலும் அவர்களுக்கு பாடப் புத்தகங்களை வழங்கி நன்றாகப் படிக்க வேண்டும் என வாழ்த்தினார்.

கடந்த ஆண்டு நடைபெற்று முடிந்த தேர்வில் 10ஆம் வகுப்பில் 400 மதிப் பெண்களுக்கு மேல் 16 மாணவர்களும், 12 ஆம் வகுப்பில் 500 மதிப்பெண்களுக்கு மேல் 11 மாணவர்களும் எடுத்துள்ளனர். மொத்தமாக 82% தேர்ச்சி பெற்றுள்ளனர் என்று தெரிவித்து இந்த ஆண்டு 100% தேர்ச்சிக்காக உழைக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினரும், பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் வி.இராமநாதன், 5வது வட்ட மாமன்ற உறுப்பினர் வட்டக் கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம், தலைமை ஆசிரியர் பாலாஜி, உதவி தலைமை ஆசிரியர் உஷா, 14வது (அ) வட்டக் கழகச் செயலாளர் ஏகா.கார்த்திகேயன், மேற்கு பகுதி முன்னாள் துணைச் செயலாளர் இ. ரமேஷ், கே.கார்த்திகேயன், பி.எஸ்.சைலஸ், கே.கார்த்திகேயன், தேசிங், முத்துராஜ், ஜெ.ஆர்.டி.சேகர், ராமராஜ், சுந்தரம், கருணாநிதி, எத்திராஜ், ரமேஷ், பிரட் சுரேஷ், வாழப்பாடி செந்தில், இரா.கணேசன், விஜயராகவன், வசந்த், மதுரை முத்து, ஜோதி, மாணிக்கம் நகர் ஜெபா, லோகு, சண்முகம், செல்வம், ஜோசப், ஆட்டோ ரமேஷ், லோகு, உள்ளிட்ட ஏராளமான கழக தோழர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

# சத்தீஸ்கரில் பள்ளிகளுக்கான கோடை விடுமுறை நீட்டிப்பு:

## சுட்டெரிக்கும் வெயிலால் நடவடிக்கை!

ராய்ப்பூர், ஜூன் 16 -

சத்தீஸ்கரில் கோடை விடுமுறைக்குப் பின் பள்ளிகள் 16ந்தேதி (இன்று) திறக்கப்படுவதாக இருந்தது. ஆனால் மாநிலத்தில் கோடை வெயிலின் தாக்கம் இன்னும் குறையவில்லை. அத்துடன் வெப்ப அலையும் நீடிப்பதால் மக்கள் பெரும் துயருக்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பள்ளிகள் திறப்பை மாநில அரசு தள்ளி வைத்திருக்கிறது. அதன்படி வருகிற 26 ந்தேதி வரை கோடை விடுமுறை நீட்டிக்கப்படுவதாக மாநில அரசு அறிவித்து உள்ளது.

முதல்மந்திரி பூபேஷ் பாகேல் அறிவுறுத்தலின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகவும், இது தொடர்பாக மாநில பள்ளிக்கல்வித்துறை விரைவில் அறிவிப்பு வெளியிடும் எனவும் மாநில அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்களை பாட்னாவில் அவரது இல்லத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா சந்தித்து திருவாரூர் மாவட்டம் காட்டூரில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் திறப்பு விழா அழைப்பிதழை வழங்கினார்.